# முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்

## O.S. No. 45 /2021

| | |
|---|---|
| **வாதி தரப்பு சாட்சி** | **: 1** |
| பெயர் | **: திரு. T.R. Karthik** |
| தகப்பனார் / கணவர் பெயர் | **: P.V. Ravi** |
| தொழில் | : |
| கிராமம் | : |
| தாலுகா | : |

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ம் நாள் வெள்ளிக்கிழமை திரு.ஸ்வர்ணம் ஜே.நடராஜன்.எம்.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, திருப்பூர் அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**<u>முதல் விசாரணை.</u>**

நான் இந்த வழக்கின் 3ம் வாதி ஆவேன். எனது சாட்சியத்தை கூடுதல் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டது. கூடுதல் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எனது தரப்பில் 11 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

1. 16.08.2021 தேதியிட்ட Email received from the District Education Officer, Palladam to the Park School regarding RTE Admissions along with certificate under 65 B of Evidence Act (3 Numbers) வா.சா.ஆ.35 வரிசை,

2. 15.04.2015 முதல் 17.08.2021 வரை Park School பெயரில் கட்டப்பட்ட EB paid receipts – வா.சா.ஆ,36 வரிசை,

3. 30.11.2019 முதல் 31.08.2021 வரை Park School பெயரில் கட்டப்பட்ட Water Tax receipts – வா.சா.ஆ,37 வரிசை,

4. 2017 முதல் 2021 வரையிலான காலத்தின் admissions register for classes from LKG to Class XII – வா.சா.ஆ.38 வரிசை,

5. Photocopy of Complaint lodged by Principal–in–Charge of the school before Palladam Police Station, dated 30.08.2021 – வா.சா.ஆ.39

6. பல்லடம் காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட CSR No.267/2021, acknowledgement– வாசா.ஆ.40.

7. CD along with 65 B Certificate – வா.சா.ஆ.41.

8. 01.09.2021 தேதியிட்ட, பல்லடம் அரசு மருத்துவமனையால் வழங்கப்பட்ட வரதராஜ் என்பவரின் Discharge Summary – வாசா.ஆ.42

9. 30.05.2019 தேதியிட்ட, report of the surveyor (Sunstar Survey) along with the survey sketch – வா.சா.ஆ.43.

10. An online copy of the FMB Sketch for Sy.No.241, 241/2C and 238 of Karaiputhur Village, along with 65 B certificate –வா.சா.ஆ.44 வரிசை.

11. Appoved building plan of the college building, run by the 1st plaintiff trust – வா.சா.ஆ.45.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. வா.சா.ஆ.35 முதல் வா.சா.ஆ.45 வரையான ஆவணங்களுக்கும் வழக்கு சொத்திற்கு சம்மந்தம் இல்லை என்றும் அவை வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்டவை என்றும் வழக்கிற்காக அவை ஏற்படுத்தப்பட்டவை என்றால் சரியல்ல. ஆனால் ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்டவைதான். தாவா சொத்து அமைந்துள்ள வளாகத்தில் ஒட்டி உள்ள பள்ளி தற்போது இயங்கவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள EB ரசீதுகள் தாவா சொத்திற்கு சம்மந்தப்பட்டவை அல்ல என்றால் சரியல்ல. அவை தாவா சொத்திற்கு ஒட்டியுள்ள பள்ளிக்குரியது என்றும அவைகளுக்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரின் பேரில் வா.சா.ஆ.39 முதல் வா.சா.ஆ.42 வரையான ஆவணங்கள் பேரில் மேல்நடவடிக்கை போலிசார் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

2. எனது புகாரின் பேரில் மேல்நடவடிக்கை எடுக்காததற்கு காரணமே எனது புகாரில் உண்மைத்தன்மை இல்லை என்பததால் தான் மேல்நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாகத்தான் மேல்நடவடிக்கை எடுக்கவில்லை. இது குறித்து உயர்நீதிமன்றத்தில் முறையிட்டு உத்தரவு எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். புகாரில்

உண்மையில்லை என எனக்கு நன்கு தெரிந்ததால் தான் நான் உயர்நீதிமன்றத்தை நாடி உத்தரவு பெறவில்லை என்றால் சரியல்ல. சர்வேயர் ரிப்போர்ட் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் கட்டிடத்தின் அமைப்பு அதை ஒட்டி என்னென்ன அமைந்துள்ளது என்பதை காட்டுவதற்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வேயர் வரைபடம் தயாரிப்பதற்கு பார்வையிடும்போது பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு கொடுக்வில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் இல்லை என்பதால் அறிவிப்பு கொடுக்கவில்லை. சர்வேயர் பிளானுடன் அறிக்கை இல்லை என்றால் சரிதான். பிளானிலும் தேதியிட்டு கையெழுத்து இல்லை என்றால் சரிதான். மேற்கண்ட சர்வேயர் நாங்கள் நியமித்தவர்கள் என்றால் சரிதான். வழ்க்கிற்காக எங்கள் தேவைக்கேற்ப தயாரித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. மேற்கண்ட நிறுவனத்திற்கு வரைபடம் தாக்கல் செய்ய அதிகாரம் கிடையாது என்றால் சரியல்ல. எந்தெந்த கிரையப்படி எந்தெந்த சொத்து அமைந்துள்ளது என குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இந்த வரைபடம் வழக்கில் உள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கு தேவையான ஆவணம் கிடையாது என்றால் சரியல்ல. சர்வேயர் நேரடியாக வந்து அளந்து பார்த்து அறிக்கையை வரைபடமாக தாக்கல் செய்துள்ளார். பிரமாணவாக்குமூலத்தில் பிரதிவாதி வரைபடம் குறித்து ஆட்சேபனை தெரிவிக்கிறார் என கூறியிருப்பது பொய் என்றும் சர்வேயர் அளந்த விவரமே பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரிதான். சர்வேயர் அளந்த தேதியில் தாவா சொத்திற்கான பட்டா சிட்ட பிரிதவாதி பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து பிரதிவாதி பெயரில் பட்டா இருப்பதாக வரைபடத்தில் சுட்டிக்காட்டவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே தாவா சொத்தை அளக்க நினைத்திருந்தால் அரசுத்துறை மூலமாக மட்டுமே அளந்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரிதவாதி பெயரில் கிரையம் வாங்கி பட்டா இருப்பதால் அவர் மனு கொடுத்தால் மட்டுமே அரசு துறையில் அளப்பார்கள் என்றும் அதனால் அரசுத்துறையை கேட்காமல் தனியார் துறை சர்வேயர் வைத்து அளந்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. சாட்சி தற்போது அளந்த தேதியை வாதி மட்டுமே சொத்தின் அனுபவத்தில் இருந்ததாகவும் அதனால் பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுக்கவில்லை என்று

குறிப்பிடுகிறார். கிரையம் செய்த தேதியிலேயே பிரதிவாதி சுவாதீனத்திற்கு வந்து விட்டார் என்றும் அடங்கல் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றும் வழக்கிற்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.44 ஆவணம் FMB Sketch தாவா சொத்தை காட்டுவதற்காக தாக்கல் செய்துள்னேள். மேற்கண்ட ஆவணம் வழங்கிய அதிகாரியின் கையெழுத்து இல்லை என்றால் QR Code உள்ளது. இது ஆன்லைன் காப்பி. Online லிருந்து எடுத்தற்கு சான்றிதழ் வழங்கியுள்ளேன். வா.சா.ஆ.45 கல்லூரி பிளான் Approval. கல்லூரி வழக்க சொத்தில் அமையவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத பிளானை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.35 RTE பள்ளி அந்த சமயத்தில் இயங்கி வந்ததை காட்டுவதற்காக தாக்கல் செய்துள்ளேன். அது தாவா சொத்திற்கு பக்கத்தில் உள்ள கட்டிடத்தில இயங்கி வந்தது. தற்போது அந்த பள்ளி அந்த கட்டிடத்தில் இயங்கவில்லை என்றால் சரிதான். நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

தற்போது பள்ளி இயங்காததற்கு காரணம் பள்ளி வளாகத்திற்கான கேட் பிரதிவாதிகளால பூட்டப்பட்டதாலும் அங்கு வந்த பெற்றோர்களுக்கு தொல்லை ஏற்பட்டதாலும் எங்களால் தொடர்ந்த பள்ளி அங்கு இயங்க முடியவில்லை.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

பெற்றோர்கள் இது சம்மந்தமாக புகார் எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் அதனால் தான் பள்ளி இயங்கவில்லை என்றால் சரியல்ல. எங்களுடைய நிர்வாக குறைபாடு காரணமாகத்தான் பள்ளி மூடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரிதவாதியால் பள்ளி மூடப்படவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2023.10.13 19:42:40 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.